**<u>செய்தி வெளியீடு எண். 215</u>**

06.03.2010

**<u>09.03.2010 அன்று மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் தலைமையில் நகர் ஊரமைப்புத் துறையின் பல்வேறு திட்டங்கள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெறவுள்ளது</u>**

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் தலைமையில் சென்னை அண்ணாசாலையில் அமைந்துள்ள நகர் ஊரமைப்பு துறையின் அலுவலகத்தின் கூட்ட அரங்கில் நகர் ஊரமைப்புத் துறையின் பல்வேறு திட்டங்கள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் அனைத்து மாவட்ட பொறுப்பு அலுவலர்கள் கலந்து கொள்கிறார்கள். கட்டிட வரைவு அனுமதி பொது மக்களுக்கு துரிதமாக 30 நாட்களுக்குள் கிடைக்க வேண்டும் என்று உள்ள ஆணையை முழுமையாக செயல்படுத்துவதற்கு உரிய வழிமுறைகள் குறித்தும், விதிமுறைகளை எளிமையாக்குவது குறித்தும் ஆய்வு செய்ய உள்ளார்கள். கூட்ட முடிவில் கட்டுனர் சங்க பிரதிநிதிகளை சந்தித்து அவர்களுடைய குறைகளை கேட்க உள்ளார்கள். இக்குறை கேட்புக் கூட்டத்தில் கட்டுனர் சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்பதற்கு நகர் ஊரமைப்பு துறையின் இயக்குநரகத்தை தொடர்புக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இக்கூட்டத்தில் தற்போதைய விதிமுறைகள் குறித்தும் கட்டிட வரைவு அனுமதி பெறுவதற்கு அளித்த விண்ணப்பம் நிலவரம் குறித்தும், எளிதாக அறிந்து கொள்வதற்காக உருவாக்கப்பட்டுள்ள இணையதளத்தினை மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்க உள்ளார்கள்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் (வெளியீடு)த் துறை